Singapore Examinations and Assessment Board

Singapore–Cambridge General Certificate of Education
Advanced Level (2024)

# Tamil B
# தமிழ் B
# (Syllabus 8614)

© MOE 2024

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பாடத்திட்ட நோக்கங்கள் | **3** |
| மதிப்பீட்டு நோக்கங்கள் | **4** |
| தேர்வு அமைப்புமுறை | **5** |
| தேர்வு விவர அட்டவணை | **7** |
| கட்டுரை மதிப்பீட்டுத் திட்டம் | **8** |
| வாய்மொழி மதிப்பீட்டுத் திட்டம் | **9** |

## பாடத்திட்ட நோக்கங்கள்

கல்வி அமைச்சின் பாடக்கலைத்திட்ட வரைவு, மேம்பாட்டுப் பிரிவினால் உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகப் புகுமுகநிலைக்கான தமிழ் B பாடத்திட்டத்தின் முக்கிய நோக்கம் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய அடிப்படை மொழித்திறன்களோடு 21-ஆம் நூற்றாண்டிற்குத் தேவையான முக்கியத் திறன்களாகிய இருவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்களிலும் மாணவர்களுக்குப் பயிற்சியளித்தலாகும். எனவே, பல்கலைக்கழகப் புகுமுகநிலைக்கான தமிழ் B பாடத்திட்டம் பின்வரும் கற்றல் அடைவுநிலைகளை அடிப்படையாகக்கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது:

**கேட்டல்**

- எளிய தலைப்புகளில் அமைந்த அன்றாடக் கலந்துரையாடல்கள், அறிவிப்புகள், விளம்பரங்கள், ஊடகப் படைப்புகள், உரையாடல்கள் ஆகியவற்றில் இடம்பெற்றுள்ள கருத்துகளைக் கேட்டுப் புரிந்துகொண்டு பதிலுரைத்தல்

**பேசுதல்**

- ஒரு நிகழ்வைத் தெளிவாகவும் பொருத்தமான சொல்வளத்தோடும் விளக்குதல்
- ஒரு சம்பவத்தில் நிகழ்ந்தவற்றைத் தெளிவாகவும் பொருத்தமான சொல்வளத்தோடும் விவரித்தல்
- பொதுவான தலைப்பில் கருத்துத் தெரிவித்தல்

**பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றம்**

- தன் அனுபவத்திற்கு உட்பட்ட தலைப்புகளில் போதுமான அளவு சரளத்தோடு உரையாடுதல்
- கலந்துரையாடல்களில் மற்றவர்களுடன் கருத்துகளைப் பரிமாறிக்கொள்ளுதல்

**படித்தல்**

- செய்தித்தாள்கள், இதழ்கள், கதை நூல்கள், விளம்பரங்கள், கடிதங்கள் முதலிய பலதரப்பட்ட பனுவல் வகைகளைப் படித்துப் புரிந்துகொள்ளுதல்
- அனுபவத்திற்கு உட்பட்ட பனுவல்களின் கருத்துகளைப் படித்துப் புரிந்துகொண்டு விளக்குதல்

**எழுதுதல்**

- பொருத்தமான சொற்களையும் எளிமையான வாக்கிய அமைப்புகளையும் பயன்படுத்தித் தம் அனுபவங்களையும் உணர்வுகளையும் சுயக் கருத்துகளையும் விளக்கிக் கட்டுரை எழுதுதல்

**எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றம்**

- மின்னஞ்சல், கடிதம், வலைப்பூ வாயிலாகத் தம் கருத்துகளையும் உணர்வுகளையும் தெளிவான மொழிநடையில், பொருத்தமான சொற்களைப் பயன்படுத்திக் கருத்துப்பரிமாற்றம் செய்தல்

## மதிப்பீட்டு நோக்கங்கள்

பல்கலைக்கழகப் புகுமுகநிலையில் பயிலும் தமிழ் B மாணவர்கள் கற்றல், கற்பித்தலின்வழி பாடத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கற்றல் அடைவுநிலைகளை அடைவதற்குரிய திறன்களைப் பெற்றிருப்பர். இத்திறன்களைச் சோதிப்பதே மதிப்பீட்டின் நோக்கங்கள் ஆகும். கற்றல் அடைவுநிலைகளை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கப்பட்ட மதிப்பீட்டு நோக்கங்கள் பின்வருமாறு:

**கேட்டல்**
- எழுத்து அல்லது பேச்சு வடிவில் அமைந்த பலவகையான பனுவல்களைக் கேட்டு அவற்றையொட்டிய புரிந்துணர்வை வெளிப்படுத்தல்

**பேசுதல்**
- கொடுக்கப்படும் தலைப்புக்கு ஏற்ற பொருத்தமான கருத்துகளை நிரல்பட எடுத்துரைத்தல்
- செவிமடுப்போர் புரிந்துகொள்ளுமாறு சரளமாகவும் தெளிவாகவும் பேசுதல்; பேச்சுத்தமிழிலோ எழுத்துத்தமிழிலோ சரியான உச்சரிப்புடனும் இயல்பான தொனியுடனும் பேசுதல்

**பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றம்**
- கொடுக்கப்படும் தலைப்பையொட்டிப் போதுமான அளவு கருத்துகளை எடுத்துரைத்தல்
- கருத்துகளைத் தெளிவாகவும் தொடர்ச்சியாகவும் வெளிப்படுத்துதல்
- செவிமடுப்போர் புரிந்துகொள்ளுமாறு எளிய சொல்வளமும் தொடர்களும் கொண்ட மொழியைப் பயன்படுத்துதல்
- தலைப்பையொட்டிக் கருத்துப்பரிமாற்றத்தில் ஈடுபடுதல்

**படித்தல்**
- பலதரப்பட்ட பனுவல்களை படித்துப் புரிந்துகொண்டு அவற்றையொட்டிய வினாக்களுக்கு விடையளித்தல்

**எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றம்**

மின்னஞ்சல் அல்லது வலைப்பூ வாயிலாகத் தம் அனுபவங்களையும் உணர்வுகளையும் விளக்கி எழுதுதல்
பொருத்தமான கருத்துகளைத் தெளிவாகவும் சரியாகவும் எழுதுதல்
பொருத்தமான சொற்களையும் எளிமையான வாக்கிய அமைப்புகளையும் பயன்படுத்துதல்; நன்கு நிரல்பட அமைந்த கருத்தமைப்போடும் பத்தி அமைப்போடும் எழுதுதல்

# தேர்வு அமைப்புமுறை

தமிழ் B தேர்வு மொத்தம் மூன்று வினாத்தாள்களைக் கொண்டது.

**வினாத்தாள் 1: கட்டுரை**
**(50 நிமிடங்கள், 20 மதிப்பெண்கள், 20%)**

இத்தாளில் இரண்டு வினாக்கள் இடம்பெறும். ஒன்று மின்னஞ்சல்; மற்றது வலைப்பூ. இந்த இரண்டு வினாக்களுள் ஏதேனும் ஒன்றினைப் பற்றி 125 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுதவேண்டும். முதல் வினாவைத் தேர்ந்தெடுப்பவர்கள் மின்னஞ்சலில் கொடுக்கப்பட்டிருக்கும் தகவல்களைக் கவனமாகப் படித்து அதற்குப் பதிலைத் தட்டச்சுச் செய்யவேண்டும். இரண்டாவது வினாவைத் தேர்ந்தெடுப்பவர்கள் கொடுக்கப்பட்ட படங்களுள் ஏதேனும் ஒரு படத்தை அல்லது அதற்கு மேற்பட்ட படங்களை அடிப்படையாகக்கொண்டு வலைப்பூவில் தங்கள் கருத்துகளைத் தட்டச்சுச் செய்யவேண்டும். தேர்வெழுதுவோர் ‘முரசு அஞ்சல்’ மென்பொருளைப் பயன்படுத்தித் தங்கள் கட்டுரையைக் கணினியில் தட்டச்சுச் செய்து மின்தேர்வுத்தளத்தின் வழியாக அதனைச் சமர்ப்பிப்பர்.

**வினாத்தாள் 2: மொழிப் பயன்பாடும் கருத்தறிதலும்**
**(1 மணி நேரம், 30 மதிப்பெண்கள், 30%)**

இவ்வினாத்தாள் ‘அ’, ‘ஆ’ ஆகிய இரு பிரிவுகளை உள்ளடக்கியது. தேர்வெழுதுவோர் கணினித்திரையில் இடம்பெறும் வினாக்களுக்கான விடைகளை மின்தேர்வுத்தளத்தின் வழியாகச் சமர்ப்பிப்பர்.

**‘அ’ பிரிவு (முன்னுணர்வுக் கருத்தறிதல்)**

இப்பிரிவில் 3 அல்லது 4 கருத்தறிதல் பகுதிகள் இடம்பெறும். அவற்றை அடிப்படையாகக்கொண்டு பத்து வினாக்கள் இடம்பெறும். தேர்வெழுதுவோர் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குக் கொடுக்கப்பட்டுள்ள சொற்களிலிருந்து மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

**‘ஆ’ பிரிவு (கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்)**

இப்பிரிவில் 1 கருத்துவிளக்கப்படத் தெரிவுவிடைக் கருத்தறிதல் இடம்பெறும். அதனை அடிப்படையாகக்கொண்டு மூன்று வினாக்கள் இடம்பெறும். தேர்வெழுதுவோர் ஒவ்வொரு வினாவிற்கும் கொடுக்கப்பட்ட தெரிவுகளிலிருந்து மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

**‘இ’ பிரிவு (தெரிவுவிடைக் கருத்தறிதல்)**

இப்பிரிவில் 2 அல்லது 3 கருத்தறிதல் பகுதிகள் இடம்பெறும். இப்பிரிவில் ஏழு தெரிவுவிடை வினாக்கள் இடம்பெறும். தேர்வெழுதுவோர் ஒவ்வொரு வினாவிற்கும் கொடுக்கப்பட்ட தெரிவுகளிலிருந்து மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

## வினாத்தாள் 3: வாய்மொழித் தேர்வும் கேட்டல் கருத்தறிதலும்

இவ்வினாத்தாள் வாய்மொழித் தேர்வு, கேட்டல் கருத்தறிதல் தேர்வு ஆகியவற்றை உள்ளடக்கியது.

### வாய்மொழித் தேர்வு
### (10-15 நிமிடங்கள், 35 மதிப்பெண்கள், 35%)

இத்தேர்வு பின்வரும் இரண்டு பகுதிகளை உள்ளடக்கியது:
- வாய்மொழிப் படைப்பு
- ஒளிக்காட்சியொட்டிய உரையாடல்

தேர்வுக்கு அமர்பவர் ஒரு வாய்மொழிப் படைப்பினைத் தயார் செய்துகொள்வதற்கும் ஒளிக்காட்சி ஊக்கக்கூறு (55 – 60 வினாடிகள்) ஒன்றைப் பார்த்துத் தம்மை உரையாடலுக்குத் தயார் செய்துகொள்வதற்கும் 10 நிமிடங்கள் வழங்கப்படும்.

**வாய்மொழிப் படைப்பு (15 மதிப்பெண்கள்)**

பேசுதல் திறனைச் சோதிக்கும் நோக்கத்தோடு வாய்மொழிப் படைப்பு எனும் பகுதி தேர்வில் இடம்பெறுகிறது. இவ்வாய்மொழிப் படைப்பு ‘பண்பாடு’ எனும் கருப்பொருளையொட்டி அமைந்திருக்கவேண்டும். தேர்வுக்கு அமர்பவர் 2 நிமிடங்களுக்கு மிகாமல் தம் படைப்பைப் படைக்கவேண்டும். கருத்துகளைச் சரளமாகவும் தெளிவாகவும் விவரிக்கும் திறன், கருத்துகளின் பொருத்தம், கருத்து அமைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் தேர்வுக்கு அமர்பவரின் படைப்பு மதிப்பிடப்படும்.

**ஒளிக்காட்சியொட்டிய உரையாடல் (20 மதிப்பெண்கள்)**

பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றத்திறனைச் சோதிக்கும் நோக்கத்தோடு இப்பகுதியில் உரையாடல் இடம்பெறுகிறது. உரையாடலுக்குத் துணைபுரியும் ஒளிக்காட்சி ‘மாற்றம்’, ‘உறவு’ ஆகியவற்றுள் ஏதேனும் ஒரு கருப்பொருளில் அமைந்திருக்கும். உரையாடல் தொடர்ச்சியாக நடைபெறுவதற்கு ஏதுவாக வாய்மொழித் தேர்வாளர் தூண்டுதல் வினாக்களைக் கேட்டு உரையாடலை வழிநடத்திச் செல்லவேண்டும். தேர்வுக்கு அமர்பவர் தேர்வாளர்களுடன் ஒளிக்காட்சியொட்டிய உரையாடலில் ஈடுபடவேண்டும். கருத்து வெளிப்பாடு, கருத்து விளக்கம், மொழி, உரையாடலில் ஈடுபாடு ஆகியவற்றின் அடிப்படையில் தேர்வுக்கு அமர்பவரின் படைப்பு மதிப்பிடப்படும்.

### கேட்டல் கருத்தறிதல் தேர்வு
### (ஏறத்தாழ 30 நிமிடங்கள், 15 மதிப்பெண்கள், 15%)

செய்தி, உரையாடல், கதை, விளம்பரம், அறிவிப்பு முதலான தலைப்புகளில் மூன்று குறும்பனுவல்களும் மூன்று நெடும்பனுவல்களும் இடம்பெறும். அவற்றையொட்டிப் பத்துத் தெரிவுவிடை வினாக்கள் கேட்கப்படும். ஒரு தேர்வில் இத்தலைப்புகள் அனைத்தும் இடம்பெறவேண்டும் என்ற அவசியமில்லை.

# தேர்வு விவர அட்டவணை

**சிங்கப்பூர்-கேம்பிரிட்ஜ் பொதுக் கல்விச் சான்றிதழ் மேனிலை**
**தமிழ் B (8614)**

| தாள் (நேரம்) | பொருளடக்கம் | வினா வகை | வினாக்களின் எண்ணிக்கை | (மதிப்பளவு) மதிப்பெண் |
|---|---|---|---|---|
| **1**<br>(50 நிமிடங்கள்) | **கட்டுரை**<br>(**125** சொற்களுக்குக் குறையாமல்)<br>வகைகள்: மின்னஞ்சல் மற்றும் வலைப்பூ | கட்டுரை | 2<br>(ஒரு வினாவிற்கு மட்டும் விடையளித்தல்) | **(20%)**<br>20 |
| **2**<br>(1 மணி நேரம்) | **மொழிப் பயன்பாடும் கருத்தறிதலும்** | தெரிவுவிடை வினாக்கள் | | **(30%)**<br>30 |
| | **‘அ’ பிரிவு**<br>முன்னுணர்வுக் கருத்தறிதல் | | 10 | 10 |
| | **‘ஆ’ பிரிவு**<br>கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் | | 3 | 6 |
| | **‘இ’ பிரிவு**<br>தெரிவுவிடைக் கருத்தறிதல் | | 7 | 14 |
| **3**<br>(10-15 நிமிடங்கள்) | **வாய்மொழிப் படைப்பு** | சுயவிடை | | **(35%)**<br>35 |
| | ‘பண்பாடு’ என்னும் கருப்பொருளையொட்டிய ஒரு தலைப்பின் அடிப்படையில் அமைந்திருக்கவேண்டும் | | 1 | 15 |
| | **ஒளிக்காட்சியொட்டிய உரையாடல்**<br>ஒளிக்காட்சி ஊக்கக்கூறு ‘மாற்றம்’, ‘உறவு’ ஆகியவற்றுள் ஏதேனும் ஒரு கருப்பொருளில் அமைந்திருக்கும் | | 1 | 20 |
| (ஏறத்தாழ 30 நிமிடங்கள்) | **கேட்டல் கருத்தறிதல்** | தெரிவுவிடை வினாக்கள் | 10 | **(15%)**<br>15 |

# கட்டுரை மதிப்பீட்டுத் திட்டம்

**பொருள் (10 மதிப்பெண்கள்)**

| நிலை | வகை 1 | வகை 2 | வகை 3 |
|---|---|---|---|
| மதிப்பெண் பரப்பெல்லை | 8 – 10 | 4 – 7 | 1 – 3 |
| **பொருள்**<br>(10 மதிப்பெண்கள்) | ▪ பொருத்தம்<br>▪ போதுமான அளவு கருத்துகளும் விரிவான விளக்கமும்<br>▪ தெளிவான கருத்து வளர்ச்சி | ▪ பெரும்பாலும் பொருத்தம்<br>▪ குறைந்த அளவு கருத்துகளும் விளக்கமும்<br>▪ போதுமான அளவு கருத்து வளர்ச்சி | ▪ பொருத்தமின்மை<br>▪ மிகக் குறைந்த அளவு கருத்துகளும் விளக்கமும்<br>▪ தெளிவற்ற குழப்பமான கருத்துகள்; கூறியது கூறல் |

**மொழியும் அமைப்புமுறையும் (10 மதிப்பெண்கள்)**

| நிலை | வகை 1 | வகை 2 | வகை 3 |
|---|---|---|---|
| மதிப்பெண் பரப்பெல்லை | 8 – 10 | 4 – 7 | 1 – 3 |
| **மொழியும் அமைப்புமுறையும்**<br>(10 மதிப்பெண்கள்) | ▪ ஓரிரு பெரும் பிழைகள்; சில இடறல்கள் அல்லது சிறு பிழைகள்<br>▪ பலதரப்பட்ட வாக்கிய வகைகள்<br>▪ பொருத்தமான பல்வகைச் சொல்வளம்<br>▪ பொருத்தமான பத்தி அமைப்பு | ▪ பெரும் பிழைகள், இடறல்கள் அல்லது சிறு பிழைகள்<br>▪ ஒரே வகையான சிறிய வாக்கியங்கள்<br>▪ குறைந்த அளவு சொல்வளம்<br>▪ ஓரளவு பொருத்தமான பத்தி அமைப்பு | ▪ பலவகையான பெரும் பிழைகள்; முறையற்ற சொல்வரிசை<br>▪ வாக்கிய அமைப்பில் சிதைவு<br>▪ சொல்வளத்தில் பெரும்பிழைகள்<br>▪ பொருத்தமற்ற பத்தி அமைப்பு |

# வாய்மொழி மதிப்பீட்டுத் திட்டம்

## வாய்மொழிப் படைப்பு (15 மதிப்பெண்கள்)

| நிலை | வகை 1 | வகை 2 | வகை 3 |
|---|---|---|---|
| **மதிப்பெண் பரப்பெல்லை** | **6 - 8** | **3 – 5** | **1 – 2** |
| **சரளமும் தெளிவும் கொண்ட பேச்சு** (8 மதிப்பெண்கள்) | ▪ பெரும்பாலும் தெளிவாகப் பேசுதல்<br>▪ சரியான உச்சரிப்புடனும் இயல்பான தொனியுடனும் பேசுதல்<br>▪ சிறு தூண்டுதல் தேவைப்படும் நிலை | ▪ சிறிது தயக்கம் காட்டிப் பேசுதல். ஆனால், அது படைப்பின் தெளிவைப் புரிந்துகொள்ளத் தடையாக இல்லாதிருத்தல்<br>▪ சரியான உச்சரிப்பைப் பயன்படுத்துவதில் சிரமப்படுதல் அல்லது பொருத்தமான தொனியுடன் பேசுவதில் சிரமப்படுதல்<br>▪ அடிக்கடி தூண்டுதல் தேவைப்படும் நிலை | ▪ நிறுத்தி நிறுத்திப் பேசுதல் அல்லது முணுமுணுத்தல்; பேச்சைப் புரிந்துகொள்வதில் சிரமப்படுதல்<br>▪ பெரும்பிழைகள் நிறைந்த பேச்சு<br>▪ தொடர்ச்சியாகத் தூண்டுதல் தேவைப்படும் நிலை |
| **மதிப்பெண் பரப்பெல்லை** | **6 - 7** | **3 – 5** | **1 – 2** |
| **கருத்துப் பொருத்தமும் அமைப்பும்** (7 மதிப்பெண்கள்) | ▪ பொருத்தமான கருத்துகள்; அவை போதுமான அளவு நிரல்பட அமைந்திருத்தல் | ▪ பொருத்தமான கருத்துகள்; அவை ஓரளவு நிரல்பட அமைந்திருத்தல் | ▪ பெரும்பாலும் பொருத்தமற்ற கருத்துகள் |

ஒளிக்காட்சியையொட்டிய உரையாடல் **(20 மதிப்பெண்கள்)**

| **நிலை** | **வகை 1** | **வகை 2** | **வகை 3** |
|---|---|---|---|
| **மதிப்பெண் பரப்பெல்லை** | **4 – 5** | **2 – 3** | **1** |
| **கருத்துரைத்தல்**<br>(5 மதிப்பெண்கள்) | ▪ போதுமான அளவு கருத்துகளை எடுத்துரைத்தல் | ▪ சில எளிய கருத்துகளை எடுத்துரைத்தல் | ▪ கருத்துகளைக் கூறச் சிரமப்படும் நிலை |
| **கருத்து விளக்கம்**<br>(5 மதிப்பெண்கள்) | ▪ கருத்து விளக்கம் தெளிவாகவும் தொடர்ச்சியாகவும் இருத்தல் | ▪ கருத்து விளக்கம் தெளிவாகவும் ஓரளவு தொடர்ச்சியாகவும் இருத்தல் | ▪ எளிய கருத்து விளக்கம்; தொடர்ச்சியாகத் தூண்டுதல் தேவைப்படும் நிலை |
| **மொழிப் பயன்பாடு**<br>(5 மதிப்பெண்கள்) | ▪ போதுமான அளவு சொல்லாட்சியும் தொடர்களும் கொண்ட மொழியைப் பயன்படுத்துதல் | ▪ அடிப்படை மொழிக்கூறுகளைப் பயன்படுத்துவதோடு சில வேளைகளில் பொருத்தமற்ற சொல்லாட்சியையும் எளிய தொடர்களையும் பயன்படுத்துதல் | ▪ பொருத்தமற்ற சொல்லாட்சியையும் தொடர்களையும் பயன்படுத்துதல் |
| **உரையாடலில் ஈடுபாடு**<br>(5 மதிப்பெண்கள்) | ▪ போதுமான ஈடுபாட்டுடன் உரையாடுதல் | ▪ சிறு தூண்டுதலோடு ஓரளவு ஈடுபாட்டுடன் உரையாடுதல் | ▪ தொடர்ச்சியான தூண்டுதலுக்குப் பின்னரும் உரையாட மிகவும் சிரமப்படுதல் |